முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், நேற்று (8.2.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில்; தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டினையொட்டி நடத்திய "கலைஞர் வசனம்/கவிதை ஒப்பித்தல் போட்டி"யில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற மதுரை, அரசு நடுநிலைப் பள்ளி 4ஆம் வகுப்பு பயிலும் செல்வி மா.ஜாக்ஷிக்காவிக்கு ரொக்கப் பரிசாக ரூ.50,000/-மும் - இரண்டாம் பரிசு பெற்ற புதுக்கோட்டை இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளி 11ஆம் வகுப்பு பயிலும் செல்வி கு.மதிவதனிக்கு ரொக்கப் பரிசாக ரூ.30,000/-மும் - மூன்றாம் பரிசு பெற்ற சென்னை, சைதாப்பேட்டை, பாத்திமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி செல்வன் சா.இஜாஸ்அகமதுக்கு ரொக்கப் பரிசாக ரூ.25,000/-மும் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வின்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் - செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர்கள் திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன், மதுரை சி.வீரகணேசன், அ.ஜாகிர்உசேன் ஆகியோர் உடனிருந்தனர்.

மாநில அரசு எப்படித்தான் செயல்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்?

தமிழ்நாடு ஆளுநர் அரசியலமைப்பை நீர்த்துப் போகச் செய்வதா?

உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடும் கண்டனம்!

புதுடெல்லி, பிப். 9 -

தமிழக அரசின் மசோதாக்களை கிடப்பில் போட்ட விவகாரத்தில் அரசின் செயல்பாடுகளுக்கு ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க கூடாது; அவ்வாறு இருக்கவும் முடியாது என உச்சநீதிமன்ற நீதிபதிகள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் பல்வேறு மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆளுநர் தரப்பில் மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி ஆஜரானார். அவரிடம் நீதிபதிகள், "தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய 12 மசோதாக்களில் இரண்டை மட்டும் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் பரிந்துரை செய்தது ஏன்? எஞ்சிய 10 மசோதாக்களை 3 ஆண்டுகளாக கிடப்பில் போட்டது ஏன்? இது தொடர்பாக ஆளுநர் தரப்பில் ஆதாரப்பூர்வமாக விளக்க வேண்டும்" என உத்தரவிட்டனர்.

அதன்படி, இதே அமர்வில் இந்தவழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

ஆளுநர் தரப்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி: -

துணைவேந்தர் நியமனத்தில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள நடைமுறை மத்திய சட்டத்துக்கும், அதன் விதிமுறைகளுக்கும் எதிராக இருக்கும் போது, அதற்கு ஆளுநர் எப்படி ஒப்புதல் அளிப்பார்? பல்கலைக் கழகங்களின் செயல்பாடுகுறித்து ஆலோசிக்க துணைவேந்தர்களின் மாநாட்டை ஆளுநர் கூட்டியபோது, அதில் பங்கேற்க கூடாது என துணைவேந்தர்களிடம் தமிழக அரசு கூறு கிறது. யுஜிசி விதிகளுக்கு கட்டுப்பட்டு செயல்படும் துணைவேந்தர்களின் பொறுப்பை ஆக்கிரமிக்க மாநில அரசு முயற்சிக்கிறது.

நீதிபதிகள்: பல்கலைக்கழக மசோதா, மத்திய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படித்தான் செயல்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்? மாநில அரசின் செயல்பாடுகளுக்கு ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க கூடாது; இருக்கவும் முடியாது. அந்த முட்டுக்கட்டையை நீக்க வேண்டும். ஆளுநர் எதுவுமே கூறாமல் மசோதாக்களை கிடப்பில் போட்டால், அவர் மனதில் இருப்பது அரசுக்கு எப்படி தெரியும்? 'நான் ஒப்புதல் தராமல் மசோதாக்களை தடுத்து நிறுத்துகிறேன். மறுபரிசீலனை செய்யுமாறு உங்களை (மாநில அரசை) கேட்கமாட்டேன்' என ஆளுநர் கூறினால் அதில் என்ன அர்த்தம் உள்ளது?

இதன் மூலம் அரசியலமைப்பு சட்டத்தின் 200வது பிரிவின் இரண்டாம் பகுதியை ஆளுநர் நீர்த்துப்போக செய்துள்ளார். அவர் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டதாகவே தெரிகிறது. ஆளுநர் இதுதொடர்பாக அரசின் கவனத்தை ஈர்த்திருக்கலாம். அல்லது இந்தந்த மசோதாக்களை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கூறியிருக்கலாம். மசோதாக்களை கிடப்பில் போட்டு தீங்கு இழைத்துள்ளீர்கள்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசின் மசோதாக்களில் ஆளுநர் கண்டறிந்த ஓட்டைகள்தான் என்ன? எதற்காக மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்தார் என்பதற்கான காரணத்தை காட்ட வேண்டும். குடியரசுத் தலைவருக்கு மசோதாக்களை பரிந்துரைக்கும் போது ஆளுநர் என்ன காரணம் கூறியுள்ளார். எந்த காரணத்தையும் கூறாமல் பரிந்துரை செய்திருந்தால் குடியரசுத் தலைவரே கேட்டு தெரிந்து கொள்வாரா?

ஆளுநர் தரப்பு: ஆளுநரிடம் அல்லது குடியரசுத் தலைவரிடம் ஒரு மசோதா நிலுவையில் இருக்கும்போது அது சட்டப் பேரவையில் காலாவதி ஆகாது. எனவே தான் அதுதொடர்பாக ஆளுநர் முடிவெடுக்க அரசியல் சாசனத்தில் கால நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை.

நீதிபதிகள்: உங்கள் வாதப்படியே மசோதாக்களை நிறுத்தி வைப்பதாக இருந்தால் பல்கலைக்கழகங்களின் நிலைமை என்ன ஆவது. துணைவேந்தர்களை நியமிக்காவிட்டால் மாணவர்களின் எதிர்காலம், கல்வித்தரம் என்ன ஆகும். ஒரு மசோதா சரியானது அல்ல என கருதினால் ஒரேயடியாக நிராகரிக்கலாமே. அதைவிடுத்து நிறுத்தி வைப்பது ஏன்? அரசியல் சாசன பிரிவுகள் 200, 201ன் சட்ட விதிகளின்படி அட்டர்னி ஜெனரல் விளக்கம் அளிக்க வேண்டும். இறுதி விசாரணை நாளை (பிப்ரவரி10ம் தேதி) நடை பெறும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் **ஒரு பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, பிப்ரவரி 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்**''என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு செ. சங்கர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக

திரு.செ. சங்கர்,

1, மேட்டுத் தெரு, மாதிராவேடு,

திருவேற்காடு, சென்னை 600 077. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

``அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்

சசிகலா வெங்கடேசன் இல்ல மணவிழா வரவேற்பு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை - கழகத்தினர் வாழ்த்துகின்றனர் !

சென்னை, பிப். 9 - சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி தி.மு.க மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சசிகலா வெங்கடேசனின் தங்கை எஸ். தேவி - ஏ.செல்வகுமார் ஆகியோரின் புதல்வர் எஸ்.முத்துக்குமாருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், மாங்கரையில் வசிக்கும் (லேட்) டி. மோகன்- எம்.ஷீபாவின் மகள் எம்.மோனிஷா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று (9-02-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை, கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் அருகில் அமைந்துள்ள அன்னை அஞ்சுகம் அம்மையார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை தாங்கிட, ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை, நந்தனம் கி.மதி , மயிலை எஸ்.முரளி, எம். கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135அ வட்ட செயலாளர் மு. செல்வகுமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானு சலீம், சூர்யா வி.சரவணன், இரா.செந்தில், கோ.சு. பவானி, பூங்கொடி ராஜேஷ், சித்ரா செல்வகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழிச்சியில் முனைவர் தமிழ்ச்சிதங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், எஸ். மோகன், மாம்பலம் ஆ.சந்திரசேகர், மு.சத்யா, எம்.ஆறுமுகம், ஜெ.ஜானகிராமன் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர் மா. அன்பரசன் கே.கண்ணன் , மு.ராஜா , உ.துரைராஜ், எஸ். டி.தங்கராஜ், ராஜா அன்பழகன், புலியூர் டி.மோசஸ், சா.தேவராசு, ஆர்.குமரன், கே.வெங்கட்ராமன் என். எஸ். பாலசுப்ரமணியன், ச.சண்முகநாதன், ஜெ.எஸ். ஆர்.ஜெகன்ராஜ் வழக்கறிஞர் எம்.ராஜதுரை, எஸ். உமாசங்கர், எ.அஸ்வின்குமார், டாண்டி பிரகாஷ், டாக்டர் எஸ்.எஸ். சரவணாகுமார், டாக்டர் பி.லட்சுமணன், டாக்டர் அனந்தகுமார், சு.பாரதிராஜா

வட்ட செயலாளர்கள் எம்.எஸ்.பழனி, வழக்கறிஞர் எம்.கே. மூர்த்தி, மு.ம.செந்தில்குமார், G.P.செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன், என். துரை, டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ.முரளி, கே. எஸ். வெல்டிங் ராஜா, பி. ஜெயக்குமார், பி.மாரி , பூக்கடை ஆர்.பழனிசாமி, ராஜ் செழியன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

கார்த்திக் சந்திரகேசன் ஆ.ஏழுமலை, த.புவியரசன், கோபி ஹரிநாராயன், ம. சதிஷ், அ.பொன்னுத்துரை, மு.பாலகுரு, எஸ்.எம்.கார்த்திக் ராஜா, டி.ஸ்ரீதர், பூங்கொடி கோவிந்தராஜ், லயன். சக்திவேல்.

பகுதி நிர்வாகிகள் மு. மணிவண்ணன், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ். ஜெனார்த்தா, எஸ்.புஷ்பா, ஜி.மோகன்ராஜ், என்.இராமகிருஷ்ணன், பாபா சுரேஷ், ச.சந்திரசேகரன், எஸ்.பாஸ்கர், மாமன்ற உறுப்பினர்கள் கார்த்திகா பாஸ்கர், கோமதி மணிவண்ணன், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் கிளை கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் மு.ஜான்சன், எஸ்.செந்தில் வி. ஜெயசீலன், ச.ஆனஸ்ட்ராஜ், ஜெ.ஸ்டீபன்ராஜ், வி. ஜெயந்தீஸ்வரன் ஆர்.கார்த்திக் ஆர்.எபினேசர் பா.ஹனீப் நா.காமேஸ்வரன் திலகம்கண்ணன் வி.தனுஷ் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், மீஞ்சூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பா.சுகுமாறன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மு. முரளிதரன்(71, அன்பு இல்லம், பள்ளிப்பாளையம், தேவம்பட்டு அஞ்சல், பொன்னேரி, மீஞ்சூர் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம் - 601 204) அவர்கள் மீஞ்சூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

" அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் மனைவி

திருமதி எழிலினி சுந்தரம் மறைவு!

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 9-

முன்னாள் அமைச்சர் (நினைவில் வாழும்) க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி எழிலினி சுந்தரம் அவர்கள் மறைவுற்றார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும், கழக ஆதி திராவிடர் நலக்குழுவின் முன்னாள் தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான (நினைவில் வாழும்) க.சுந்தரம் அவர்களின் துணைவியார் திருமதி எழிலினி சுந்தரம் அவர்கள், நேற்று முன்தினம் (7.2.2025 - வெள்ளிக்கிழமை) இரவு உடல் நலக்குறைவு காரணமாக தமது 70வது வயதில் இயற்கை எய்தினார் எனும் செய்தி கேட்டு துயருற்றேன்.

அன்னாரின் மறைவுக்கு க.சுந்தரம் - எழிலினி இணையரின் குடும்பத்தினர், கழகத்தினர், அவரது உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்.கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை	மாலை 3.00 மணி	கடலூர் மேற்கு	தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் அவர்களின் மனைவி திருமதி.எழிலினி சுந்தரம் அவர்கள் இயற்கை எய்தினார். அவர்களது உடலுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.இதில் கழகத்தினர் உடனிருந்தனர்.